# கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் கீழ் சுகாதாரப் பாதுகாப்புடன் பாடசாலைகளை ஆரம்பித்தல்

பாடசாலை ஆரம்பம் -: 2021 ஜனவரி 11 (மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் தவிர்த்து)

## அதிபர்களுக்கான ஆலோசனைகள்

### பாடசாலை ஆரம்பிப்பதற்கான முன்னாயத்தங்கள்

- 2021 ஜனவரி மாதம் 06, 07, 08, 09 மற்றும் 10 ஆம் திகதிகளில் சுகாதார வழிகாட்டல்களுக்கமைய மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் பெற்றோர் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களின் பங்களிப்புடன் பாடசாலையை ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அச்செயற்பாடு தொடர்பாக அவர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்று தேவையான மாற்றங்களைச் செய்தல்
- கொவிட் – 19 தொற்றுநோய் நிலைமையின் கீழ் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறை தொடர்பாக பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரி / பொதுச் சுகதார பரிசோதகரை அழைத்து அனைவருக்கும் அறியப்படுத்தல்.
- கோவிட் 19 பரவலைத் தடுப்பதற்காக பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்களை தயார்படுத்தல் தொடர்பான 15/2020 இலக்க சுற்றுநிருபத்தை நடைமுறைப்படுத்தல்

## பாடசாலை ஆரம்பித்ததன் பின்னர் சுகாதாரப் பாதுகாப்பான முறையில் பாடசாலையை நடாத்துதல்

- பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்களை இனிதாக வரவேற்பதனூடாக சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வலிமையை ஏற்படுத்துதல்.
- **மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தரும்போது, பாடசாலைக்குள், மற்றும் பாடசாலையிலிருந்து வெளிச்செல்லும் வழியில் முகக்கவசம் அணிவதனை கட்டாயப்படுத்தல்/ ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு இது கஷ்டமாக இருப்பின் சமூக இடைவெளி பேணக்கூடிய சந்தர்ப்பங்களில் முகக்கவசங்களை அகற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல்.**
- பாடசாலைக்குள் நுழையும் போது சகல மாணவர்களதும் உடல் வெப்பநிலையை பரிசோதனை செய்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் மீண்டும் உடல் வெப்பநிலையை மீண்டும் பரீட்சித்தல்.
- மாணவர்கள் பாடசாலையினுள் நுழையும் போது கைகளை கழுவுவதனை கட்டாயப்படுத்தல் மற்றும் அச்செயற்பாடு திறன்பட மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதனை தினமும் மேற்பார்வை செய்தல்.
- மாணவர்களுக்கிடையில் சமூக இடைவெளி பேணுதல்.

- மாணவர்கள் கூட்டமாக சேருவதனை தடுப்பதற்காக வகுப்பு மட்டத்தில் தேவையான நேரத்தில் இடைவேளை வழங்குதல்.
- வீட்டிலிருந்து கொண்டுவரும் உணவு, நீர் மற்றும் ஏனைய உபகரணங்களை பகிர்ந்து கொள்வதை தடுத்தல்.
- ஒருவருக்கொருவர் தொட்டுக்கொள்ளும் படியான விளையாட்டுக்களில் ஈடுபடுவதனை தவித்தல் மற்றும் உடற்பயிற்சி செயற்பாடுகளை சமூக இடைவெளி பேணி நடாத்துதல்.
- **அவசர நிலைமையின் போது தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கங்கள் மற்றும் தகவல்களை சேகரித்து அலுவலகத்தில் காட்சிப்படுத்தல் மற்றும் அது தொடர்பாக பணியாளர்களை அறியப்படுத்தல்.**
- திடீரென பாடசாலையில் ஒரு தொற்றாளர் இனங்காணப்படும் சந்தர்ப்பத்தில் அவரை நோயாளர் அறைக்கு அனுப்பி உடனடியாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி/ பொதுச் சுகாதார பரிசோதகரிடம் ஆலோசனை பெற்று அதன் படி நடவடிக்கை எடுத்தல்.
- அதிபரின் தலைமையில் பாடசாலையின் சுகாதார மேம்பாட்டுக் குழுவை முனைப்புடன் பேணுவதனூடாக கோவிட் 19 தொற்றுநோய் பரவலை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பினை ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பகிர்ந்தளித்தல்.
- பாடசாலையினை சுகாதார பாதுகாப்பன இடமாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பெற்றோர் மற்றும் பாடசாலை சமூகத்தின் முன்னிலையில் அதற்கான நம்பிக்கையினை ஏற்படுத்துவதை உறுதி செய்தல்
- பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னரான முன் ஏற்பாடுகள் மற்றும் ஆரம்பித்ததன் பின்னர் ஆரோக்கிய நிலைமையை பேணுவதற்கான மேற்பார்வை ஆவணமொன்றினை பேணிவருதல்.
- மாணவர்களின் உள நலத்தை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- காய்ச்சல்/ சுவாச நோய்க்கான அறிகுறிகளுடைய மாணவர்கள் / தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்கள் / கோவிட் தொற்றுநோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்களை சுகாதார அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறும் வரையில் பாடசாலைக்கு சமூகமளிக்காதிருக்குமாறு அம்மாணவர்களின் பெற்றோரை அறியப்படுத்தல்.
- கோவிட் 19 வைரஸ் தொடர்பான ஏதேனும் ஒரு நிலைமை காரணமாக வீட்டில் இருக்க நிர்பந்திக்கப்படும் மாணவர்களின் அன்றாட கல்வி நடவடிக்கைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதிப்பதற்கான உதவிகளை வழங்குதல்.